# <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 1/2018</u>

நாள் 02.03.2026

PW1 – ரகுபதி

த/பெ –

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of March 2026)**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நான் டிகிரி வரை படித்துள்ளேன். எனது அப்பா பெயர் வெங்கடாசலம். 1 முதல் 3 பிரதிவாதிகளும், எனது தங்கை தனலட்சுமியும் வெங்கடாசலத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். 1ம் பிரதிவாதி எனது தாயா். 3ம் பிரதிவாதி எனது சகோதரர். நான் எனது தாயார் மற்றும் எனது சகோதரருக்காகவும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன். எனது தம்பி 3ம் பிரதிவாதி 10ம் வகுப்பு வரை படித்துள்ளா். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். முதல் கையெழுத்து எனது தாயார் பாப்பாத்தியின் கையொப்பம் ஆகும். அதில் மூணாவதாக உள்ள கையொப்பம் எனது தம்பி 3ம் பிரதிவாதி பசுபதியின் கையொப்பம். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தை யுவராஜ் என்ற ஆவண எழுத்தர்தான் தயாரித்தார் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை பிரதிவாதிகளான நாங்கள் மூவரும் சா்பதிவாளர் அலவலகத்திற்கு சென்று ஒரே நாளில் பதிவு செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அவ்வாறு ஒப்பந்தத்தை பதிவு செய்து கொடுத்தபோது அந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள ஆவணங்களை தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால்

சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கிரைய தொகையாக ரூ.7,00,000/- என்றும், அதில் கிரைய முன்பணமாக ரூ.5,50,000/- த்தை பெற்றுக்கொண்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தமானது கடனுக்காக வேண்டி எழுதப்பட்டதாக அதில் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் எங்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் எங்கள் தரப்பில் தரப்படவில்லை என்றால் சரிதான்.

2. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்ததை நாங்கள் மறுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் வாதிகளிடம் இருந்து கடனாக வாங்கியதாக சொல்லப்படும் தொகையை நாங்கள் திருப்பி செலுத்திவிட்டோம் என்பதற்கு ரசீது எதேனும் உண்டா என்றால் இல்லை. நாங்கள் வாதிகளிடம் கடனாக ரூ.3,00,000/- மட்டும்தான் வாங்கினோம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டில் சொத்தின் சந்தை மதிப்புக்குத்தான் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின்படி தாவா சொத்திற்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளாம் என்றால் சரியல்ல, கடன் ஆதரவுக்காகதான் எழுதிக்கொடுத்தோம். 17.12.2015 தேதியில் நாங்கள் கிரைய முன்பணமாகத்தான் ரூ.5,50,000/- ஐ சாட்சிகள் முன்னிலையில் வாதிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதிகள் தாவாவில் கோரியபடி கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.02 14:47:52 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**